# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

எண்.208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை- 600 106
தொலைபேசி எண் : **2363 5010, 2363 5011** நிகரி : **2363 8282, 2363 8283**
மின்னஞ்சல் – **tnsec.tn@nic.in** இணையதளம் - **www.tnsec.tn.nic.in**


## செய்தி வெளியீடு

செய்தி வெளியீடு எண் **02/2020** நாள் **02.01.2020**

தமிழ்நாட்டில் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான சாதாரண தேர்தல்களுக்கான வாக்குப்பதிவு அரியலூர், கோயம்புத்தூர், கடலூர், தர்மபுரி, திண்டுக்கல், ஈரோடு, கன்னியாகுமரி, கரூர், கிருஷ்ணகிரி, மதுரை, நாகப்பட்டினம், நாமக்கல், பெரம்பலூர், புதுக்கோட்டை, ராமநாதபுரம், சேலம், சிவகங்கை, தஞ்சாவூர், நீலகிரி, தேனி, தூத்துக்குடி, திருச்சிராப்பள்ளி, திருப்பூர், திருவள்ளூர், திருவண்ணாமலை, திருவாரூர் மற்றும் விருதுநகர் ஆகிய 27 மாவட்டங்களில் இரண்டு கட்டங்களாக 2019 டிசம்பர் 27 மற்றும் 30 ஆகிய தேதிகளில் நடைபெற்றது.

ஊரக உள்ளாட்சிகளில் மொத்தம் 91,975 பதவியிடங்களை நிரப்பிட நேரடித் தேர்தல் நடைபெற்றது. இதில், 27 மாவட்ட ஊராட்சிகளுக்கு உட்பட்ட 515 மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர் பதவியிடங்களும், 314 ஊராட்சி ஒன்றியங்களுக்கு உட்பட்ட 5,090 ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர் பதவியிடங்களும், 9,624 கிராம ஊராட்சித் தலைவர் பதவியிடங்களும் மற்றும் 76,746 கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர் பதவியிடங்களும் அடங்கும்.

இதில், கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர்களில் 18,137 பதவியிடங்களுக்கும், கிராம ஊராட்சி மன்றத் தலைவர் பதவிகளில் 410 பதவியிடங்களுக்கும், ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர்களில் 23 பதவியிடங்களுக்கும், என மொத்தம் **18,570** பதவியிடங்களுக்கு வேட்பாளர்கள் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

இத்தேர்தலில் முதல் கட்ட வாக்குப்பதிவில் **24,680** வாக்குச்சாவடிகளிலும், இரண்டாம் கட்ட வாக்குப்பதிவில் **25,008** வாக்குச்சாவடிகளிலும், மொத்தம் **49,688** வாக்குச்சாவடிகளில் வாக்குப்பதிவு நடைபெற்றது. 27 மாவட்டங்களில் நடைபெற்ற ஊரக உள்ளாட்சித் தேர்தலில் பதிவான வாக்குகள் 315 வாக்கு எண்ணும் மையங்களில் இன்று 02.01.2020 காலை 08.00 மணிக்கு தொடங்கி நடைபெற்று வருகிறது.

வாக்கு எண்ணும் மையங்களில் மூன்று அடுக்கு பாதுகாப்பு செய்யப்பட்டுள்ளது. காவல்துறையைச் சார்ந்த 30,354 அலுவலர்கள், காவலர்கள் இப்பணியில் ஈடுபட்டுள்ளனர்.

அனைத்து வாக்கு எண்ணும் மையங்களிலும், வாக்குச் சீட்டுகளை வகைப்படுத்தி பிரிக்கும் அறை, வாக்குச்சீட்டுகளை எடுத்துச் செல்லும் நடைபாதை மற்றும் வாக்குகள் எண்ணும் அறைகள் என ஒவ்வொரு வாக்கு எண்ணும் மையங்களிலும் 50 முதல் 60 CC கேமராக்கள் வீதம் சுமார் 16,000 CC கேமராக்கள் பொருத்தப்பட்டு வாக்கு எண்ணும் நடவடிக்கைகள் பதிவு செய்யப்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு வாக்காளரும் 4 வாக்குகள் பதிவு செய்வதால் முதலில் அவற்றை பிரிக்கும் பணி மேற்கொள்ளப்படும். அதன் பின் அவற்றை வாக்கு எண்ணும் அறைக்கு அனுப்பப்படும். ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனியாக வாக்கு எண்ணும் அறைகள் அமைக்கப்பட்டுள்ளன. வாக்கு எண்ணும் பணியில் ஒவ்வொரு மாவட்டத்திலும் 3,000 முதல் 5,500 வரையிலான பணியாளர்கள் வீதம் சுமார் 1,00,000 மேற்பட்ட பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

ஒவ்வொரு வாக்கு எண்ணும் மையத்திற்கும் மத்திய அரசு நிறுவனங்களை சேர்ந்த 6 அலுவலர்கள் நுண்பார்வையாளர்களாக நியமிக்கப்பட்டு சுமார் 1890 நுண்பார்வையாளர்கள் வாக்கு எண்ணும் பணிகளை மேற்பார்வையிட்டு வருகின்றனர். ஒவ்வொரு மாவட்டத்திலும் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தினால் நியமனம் செய்யப்பட்ட ஒரு இந்திய ஆட்சி பணி அலுவலர் தேர்தல் பார்வையாளர்களாக வாக்கு எண்ணும் பணியினையும் கண்காணித்து வருகின்றனர்.

மேலும் வாக்கு எண்ணிக்கை மையங்களில் 4,00,000 க்கும் மேற்பட்ட வேட்பாளர்களின் முகவர்கள் அவர்களது வேட்பாளர்கள் போட்டியிட்ட வார்டுகளில் பெற்ற வாக்கு எண்ணும் பணிகளை பார்வையிடுகின்றனர். வாக்கு எண்ணும் பணி அமைதியாகவும் நேர்மையாகவும் வெளிப்படைத் தன்மையோடும் நடைபெறுவதற்கு தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது.

(தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய ஆணைப்படி)

2/1/2020

மக்கள் தொடர்பு அலுவலர்.